வைப்புக் கொடுக்க வேண்டியிருக்குமாம். காங்கிரஸுக்கு ஏராளமாக பெருவாரியான ஓட்டர்கள் ஓட்டளித்திருக்கிறார்கள் எனினும் பல மாதிரியான திட்டங்களுக்கு அவர்கள் ஓட்டளித்துள்ளார்கள். ஆகவே, இந்த எல்லாத் திட்டங்களிலுமுள்ள பொதுவான குறைந்த பட்ச திட்டத்திற்கு ஒன்று படுவதுதான் சரியானதாக இருக்க முடியும். இதன் அடிப்படையில் தான் காங்கிரசல்லாத கட்சிகளின் கூட்டு நிறுவப்படமுடியும். உதாரணமாக, ஐ.மு. ஜமீன்தாரித்துவத்தை ஒழிக்க வேண்டுமென்று கேட்கும் போது 20 சதவீதமும் வார உரிமையை குறைந்த பட்ச திட்டத்திற்கு ஒத்துக்கொள்வதானால், அது ஐ.மு. திட்டத்திற்கு ஓட்டளித்த மக்களுக்கு துரோகம் செய்வதாக இருக்கும், அதாவது ஜமீன்தாரித்துவ ஒழிப்பு திட்டத்திற்கு துரோகமிழைப்பதாகுமென்று, R.S.P.; K.S.P. கள் கருதுகின்றனர்கள். கம்யூனிஸ்டுகள் இக்கருத்துக்கு மாறுபடுகிறார்கள். ஜமீன்தாரித்துவ ஒழிப்புக்காக வாரிசுதாரணை [illegible] போதே, ஒரு கூட்டு சர்க்காரால் கொண்டுவரக்கூடிய 50 சதவீத வார உரிமையை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கம்யூனிஸ்டுகள் விரும்புகிறார்கள். அரைகுறையான வெற்றிகளைப்பெற்று அதே அமைச்சில் ஐ.மு. திட்டத்தையும் காரியசாத்தியமாக்க போராடுவது என்றும் அவர்கள் எண்ணுகிறார்கள். R.S.P.; K.S.P. களின் போக்கு மக்களின் கஷ்டத்தை துடைக்க நடைமுறையில் ஏதும் செய்யமுடியாத நிலைமையாகுமென்று அவர்கள் கருதுகிறார்கள். கம்யூனிஸ்டுகள் ஒன்று சேருவதற்கு முக்கிய ஐ.மு. திட்டத்தையும் ஏற்க வேண்டுமென்று முன்வைக்கும் [illegible] உண்மை. அத்தகைய முன்னேற்ற ஒற்றுமை இன்மையையும் நடைமுறையில் ஒன்றும் செய்யமுடியாத நிலைமையையும் தான் ஏற்படுத்தும். வாக்களித்த மக்களால் ஏற்க கூடியவைகளுக்காகவும், அவர்களின் நலனுக்காகவும் ஒருசேர பட்டகாலக் கட்டத்தில் கம்யூனிஸ்டுகள் முன் செல்லுகிறார்கள். *

<u>சென்னை சேமிப்பு நிதி:</u> கடந்த ஐந்து வருடங்களில் சேமிப்பு நிதி 43 கோடி போனால் 24 கோடி போய் செலவு போக மிச்சம் இருப்பு 19 கோடி ரூபாய்: * <u>கல்வி</u>: ரஷ்ய கல்வி யதார்த்தத்துடன் இன்று விலகாதது. உலக கல்வி இயக்கங்கள்– அதீத கற்பனாவாதம், [illegible], யதார்த்த வாதத்திற்கு அப்பாற்பட்ட வாதம் முதலிய ரெ.அ. நாயகனின் [illegible] ஆட்டுவைத்த வாதங்களெல்லாம் [illegible] சொல்லவாவில: ஒரு இல மதிமயங்கிகள் தங்களுடைய ஆசாபாசங்களை அக்கல்விகளில் காண்பதற்கு பதிலாக, சமுதாயத்தின் மக்கள் அனைவருமே தங்களுடைய உயர்வேற்றை அக்கல்வியில் கண்டார்கள். கல்வி– மக்களின் [illegible] அடிப்படையாக கொண்டிருக்க வேண்டும்.

<u>பாரத சிந்தனாபாதகம்:</u> மார்ஷல் திட்டம், அட்லாண்டிக் ஒப்பந்தம், ஹூவெர் திட்டம், [illegible], 140 கோடி ரூபாய்க்கு மேலாக நாட்டின் மீது ராணுவ சுமை [illegible] வேண்டும் என அமெரிக்கா கோருகிறது. இதை அரசியல் கட்சிகள் எதிர்ப்பதற்கான அடிப்படை தேவை நாட்டில் [illegible]. இம்மாகாணத்தில் காங்கிரஸ் பெற்ற ஓட்டுகள் 66 லட்சம். எதிர்கட்சிகள் பெற்றது 126 லட்சம் * தனது மந்திரி சபை அமைப்பு முயற்சிக்கு மக்கள் காட்டிவரும் எதிர்ப்பே தனது போக்கு சரியானது என்று நிரூபிக்கும் என நம்பிக்கை கொள்ளச் செய்துள்ளது என்று தமது பாதங்களில் சொல்லுவதற்கு துணிச்சல் இருக்கிறது. மக்கள் மன்றத்தில் வந்த பகிரங்கமாக தேர்தலில் நிற்கட்டும் * பார்த்தினே ஜனநாயகத்தின் பேரால் மக்கள் விரும்பாத, ஜனநாயக கேடான, ஜனநாயக விரோத ஆட்சிக்கெதிராக மக்கள் நடத்தும் போராட்டத்தை ஒடுக்க மழுங்கச் செய்து தீர்த்துவிடலாம் என்று எண்ணுகிறார் * கவர்னருக்குள்ள நியமன அதிகாரம் சட்டசபையில் உள்ள ஒரு அரசியல் கட்சிக்குத் தலைமை தாங்கவும் அக்கட்சி உள்ளே இருக்கும் ஆதர்களிலிருந்து மீளவும் அக்கட்சி சர்க்காரமைக்கவும் ஒரு அரசியல் வாதியை உள்ளே கொண்டு வரும் முறையில் உபயோகிக்கப் படக்கூடாது. அரசியல் சட்டத்தின் 171 (3) e. பாராவும் 5 பாராவும் கவர்னருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்ததாகும் * "ஒரு கூட்டு சர்க்காரை அமைக்க எல்லா காங்கிரஸ் அல்லாத கட்சிகளும், சுயேச்சையாளர்களும், ஒன்றுபட வேண்டுமென மக்கள் இடைவிடாது தொடர்ந்து கிளர்ச்சி செய்ய வேண்டும். இன்றைய நிலையில் கூட்டு சர்க்காரால் அதிகமாக மக்களுக்குச் சேவை செய்ய முடியாதென R.S.P. கூறுவது தவறு. மக்களின் உடனடி கஷ்டங்களைத் தீர்க்கவும், உணவு நிலைமையை அபிவிருத்தி செய்யவும், பூரண ஜனநாயக உரிமைகள் அனைவருக்கும் வழங்கவும் கூட்டு சர்க்காரால் நிச்சயமாய் முடியும். A.K.G. * தமிழ் எத்தவன் தண்டல் காரன் என்பதே இன்றைய கா. நீ. * தோழையத்தில் 1 வேலையாள் என்பது ஒரு [illegible] அளவு வேலையே தவிர [illegible], [illegible] இருப்பது போல் 8, 10 ஏன் 12 மணி நேர வேலையல்ல. 1700 பேருக்கு ஒரு நூல் நிலையம்– அமெரிக்காவில் 20,331 பேருக்கு ஒன்று; இங்கிலாந்திலோ 43000 பேருக்கு ஒன்று; * "மக்களுக்கு உண்மையாகவே சேவை செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் காங்கிரஸ்காரர்கள் நம்மை அணுகுவார்களானால்; அவர்களும் கூட இத்தகைய சர்க்காரில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்". கோஷ். *

[illegible] 22/2/52